# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,904—1970 අප්‍රේල් 30 වැනි බ්‍රහස්පතින්දා—1970.4.30

14,904 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. | 373 | ஏலவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 385 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 386 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. | 389 | நானாவித அறிவித்தல்கள் | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்களை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்

---

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.பொ.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

**குறிப்பு**—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், இயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையினம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப் பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப் படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

No. A 71/X2235/69

## பொதுத் திறைசேரி

### உதவிப் பணிப்பாளர் பதவி (கூட்டுத்தாபனப் பகுதி)

பொதுத் திறைசேரியின் கூட்டுத்தாபனப் பகுதியில் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப் பெற்று செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் தேதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 15.5.1970.
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 22.5.1970.

**குறிப்பு.**—(1) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும்9 "×"4 அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத்தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவராயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தினையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் படிகளும்.**—

(அ) நிரந்தர, உபகாரச் சம்பளத்துக்குரிய அடிப்படையின் ஆண்டுக்கு 10,080 ரூபா—13 × 480—16,320 ரூபா சம்பளத்திட்டத்தில் திரட்டிய சம்பளமும் அத்துடன் மணமானவர் படியும் ;

(ஆ) தற்காலிகச் சேவை மாற்றம் பெற்ற கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் கூட்டுத்தாபனச் சம்பளத்துடன் ஒரு படியும் பெறுவர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அரசாங்க சேவையில் ஏற்கெனவே இல்லாவிடின் அவரின் தகைமைக்கும் அனுபவத்திற்குமேற்ப சம்பளத் திட்டத்தில் ஒரு நிலையில் வைக்கப்படும்.

3. **தகைமைகள்.**—பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும்.—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையரென்பதற்கும் ;

(ஆ) 1970.5.15 ஆந் தேதியில் 23 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலுமுள்ளவரென்பதற்கும் திருத்திகரமான சான்றளித்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மேலெல்லை வயது பொருந்தாது).

(இ) **கல்வித் தகைமைகள்** (1) கணிதம் அல்லது/அத்துடன் புள்ளி விவரவியல் அத்துடன்/அல்லது பொருளியல் அத்துடன்/அல்லது கணக்கியல் ஆகியவற்றில் பல்கலைக் கழகப்பட்டம் அத்துடன் பின்வருந்துறைகள் எவற்றிலும் ஒரு வர்த்தக அல்லது கைத் தொழில் முயற்சியில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் ;

(அ) நிதி நிருவாகம், பரிசீலனையும் முகாமையும் ;

(ஆ) கணக்கிடல், செலவுக் கணக்கு, முகாமை, சம்பந்தமாகத் தகவல், முறைகள் தயாரித்தல் ;

(இ) திட்டப் பரிசீலனையும் மதிப்பீடும் ; அல்லது

(2) தத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையின் ஒரு பகுதியில் சித்தி அல்லது செலவு வேலைக் கணக்காளர் கழகப் பரீட்சையில் I–IV ஆம் பகுதிகளில் சித்தி அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமை.

4. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கப்படும்போது அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு**—சமயதிட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) உயர் தொழிற்றகைமையும் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையையும்/உயர்தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு**.—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தலாகாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவ்வற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

5. அரசாங்கச் சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய தேதியை அரசாங்கச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

6. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்தச் செய்திமடலின் I ஆம் பாகம்; II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
அ. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 23 ந் உ.

4–965/1—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

No : AA 38/X. 2236/70

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி—பொறிமுறை எந்திரவியல் விரிவுரையாளர், II ஆந் தரம்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள பொறிமுறை எந்திரவியல் விரிவுரையாளர், II ஆந் தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, "செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 " என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—1970.5.15

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1970.5.22

**குறிப்புகள்**— (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினல் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாக விருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**.—

இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்—**

இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :— ரூ. 6,720—12×360—11,040 வருடாந்தம்.

**குறிப்பு** —(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதிப் பட்டம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமைகள் பெற்றுள்ளவர்கள் வருடாந்தம் ரூ. 7,800 ஆரம்பச் சம்பளமாகப் பெறுதற்கு உரித்துடையராவர்.

(ii) பல்கலைக் கழக அல்லது சமமான மட்டத்தில் கற்பித்தலில் 3 வருட அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகள் திறைசேரி அனுமதியுடன் வருடாந்தம் ரூ. 7,800/- என்ற சம்பளப் படியில் நியமிக்கப்படலாம். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவருடைய சம்பளம், 13.6.59 ஆந் திகதிய 492 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்தால் திருத்தப்பட்டுள்ளதற்கமைய 26.2.57 ஆந் திகதிய 361 ஆந் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்திலுள்ள விதிகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படும்.

(iii) லண்டன் குடிசார் எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர் தகைமை, மின்சார எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர் தகைமை, பொறிமுறை எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர், தகைமை போன்ற பூரண உயர்தொழில் தகைமைகளைப் பெற்றுள்ள ஓர் அபேட்சகர் வருடாந்தம் ரூ.9,960 ஆரம்பச் சம்பளமாகப் பெறுதற்கு உரித்துடையராவர்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ஆந் தர விரிவுரையாளர்கள் அவர்களின் சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப் படியை—அதாவது வருடாந்தம் ரூ. 11,040 ஐ—அடைந்து அச்சம்பளப் படியில் ஒரு வருடம் சேவை புரிந்தபின் வருடாந்தச் சம்பள உயர்ச்சிப் பணங்களாக ரூ. 480/- பெற்று வருடாந்தம் ரூ. 13,440/- என்ற சம்பளப் படிவரை சம்பளம் பெறுதற்கு உரித்துடையராவர்.

4. **தேவைப்படும் தகைமைகள்—.**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும்.—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970. 5. 15 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் விஞ்ஞானமாணி (எந்திரவியல்) பட்டம், பொறிமுறை எந்திரவியல் பாடங்களுடன் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது (ii) பொறிமுறை எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர் தகைமைப் பரீட்சையின் I ஆம், II ஆம் பகுதிகளில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

அல்லது (iii) சமமான, அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பிக்கக்கூடிய ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத் தேர்ச்சி பெறவேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு— சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு**—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுதாக அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா.
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970.4.22.

4—965/2—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

No. A. 70/X2237/69

## பொதுத் திறைசேரி

### பணிப்பாளர் பதவி, கூட்டுத்தாபனப் பகுதி

பொதுத் திறைசேரியின் கூட்டுத்தாபனப் பகுதியில் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் தேதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 1970.5.15

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1970.5.22

**குறிப்பு:** (1) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9"×4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது

கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வர விரும்புபவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத்தாமே பொறுப்பாளியாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கை பிரதிநிதிகள் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

**(4) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்** —இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவராயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவாரர்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தினையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் படிகளும் —**

(அ) நிரந்தர, உபகாரச்சம்பளத்துக்குரிமையுள்ள அடிப்படையில் ஆண்டுக்கு ரூபா 20,640—3 × 600—2 × 900—24,240 ரூபாத் திட்டத்தில் திரட்டிய சம்பளமும் மணமாகியவர் படியும். ; அல்லது

(ஆ) தற்காலிகச் சேவைமாற்றம் பெற்ற கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் கூட்டுத்தாபனச் சம்பளத்துடன் ஒரு படியும் பெறுவர்; அல்லது

(இ) உபகாரச்சம்பளத்துக்குரிமையற்ற அடிப்படையில் ஒப்பந்த உத்தியோகத்தர்கள், முதலிய 3 ஆண்டுக் காலத்துக்கு மேற்படாமல் மாதத்துக்கு ரூபா 2,000—50 – 2,500 ரூபா சம்பளமும் அத்துடன் மணமானவர் படியும் சகாய நிதி நன்மைகளும் பெறுவர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தியின் தகைமைக்கும் அனுபவத்திற்குமேற்ப அவர் மேற்கூறிய சம்பளத்திட்டத்தில் ஒரு நிலையில் வைக்கப்படலாம்.

3. **தகைமைகள்** —பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் —

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையரென்பதற்கும் ;

(ஆ) 1970.5.15 ஆந் தேதி 35 வயதுக்குக் குறையாமலும் 50 வயதுக்கு மேற்படாமலுமுள்ளவரென்பதற்கும் திருப்திகரமான சான்றளித்தல் வேண்டும்.
(ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மேலெல்லை வயது பொருந்தாது).

(இ) கணிதம்/விஞ்ஞானம்/பொருளியல்/வர்த்தகம்/கணக்கியல் ஆகியவற்றில் பல்கலைக்கழகச் சிறப்புப் பட்டமும் இங்கிலாந்து, வேல்சு அல்லது இலங்கை தத்துவம் பெற்ற கணக்காளர் கழகத்தில் இறுதிப் பரீட்சையும்.

(ஈ) பின்வருந்துறைகள் அடங்கிய ஒரு தனியார் துறையில் அல்லது அரசாங்கத்துறையில் அல்லது வர்த்தக அல்லது கைத்தொழில் முயற்சியில் ஒரு பொறுப்பான பதவியைத் தகைமை பெற்ற பின்னர் ஐந்தாண்டுகளேனும் வகித்த அனுபவமிருத்தல் வேண்டும்.

(1) நிதி நிருவாகமும் முகாமையும்.
(2) நிதி, செலவு பரிசீலனைகள்.
(3) கணக்கிடல், செலவுக்கணக்கு, முகாமை சம்பந்தமாகத் தகவல் முறைகள் தயாரித்தல்.
(4) திட்டப் பரிசீலனையும் மதிப்பீடும்.

4. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கப்படும்போது அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு**— சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்;

(இ) உயர் தொழிற்றகைமையும் அத்துடன்/அல்லது தொழினுட்பத் தகைமையும் பற்றிய சான்றிதழ் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு : (1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தலாகாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

5. அரசாங்கச் சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய தேதியை அரசாங்கச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

6. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்தச் செய்திமடலின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய.
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்கசேவை ஆணைக்குழு அலுவலகம்,
அ. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1970.4.23.

4—965/3—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## உபஅஞ்சல் அதிபர் பதவி—மாயாவழி-தரம் ஏ

கொழும்பு 5, மாயாவழி உபஅஞ்சல் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிகக்கூடிய மாதாந்தப்படி 75 ரூபாவாகும்.

1. இரு பாலாராலும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் 30.5.70 ஆம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், 45 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. மாநகரசபைப் பகுதிக்குள், 10 வருடங்கள் அல்லது அதற்குக் கூடுதலாக நிரந்தரமாக வசிக்கின்றவர்களாக இருத்தல் வேண்டும். உப அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள வட்டாரத்தில் அல்லது அண்மையிலுள்ள வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3. சிங்களம்/தமிழ்/எண்/ஆரம்ப கணிதம் உட்பட மூன்று பாடங்களில் சி. த. ப. அல்லது க. பொ. த. பரீட்சையில் (சாதாரணதரம்) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. கொழும்பு 3, மாயாவழி உப அஞ்சல் அலுவலகத்தை அமைப்பதற்கு வாடகையின்றி ஒரு கட்டிடத்தை விண்ணப்பதாரர் அளித்தல் வேண்டும்.

5. கொழும்பு 1, எச்சலன் சதுரம், 5 ஆம் இலக்கக் கட்டிடத்திலுள்ள அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சர் ( மேற்கு, தெற்கு) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய அச்சடித்த படிவத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்து அவரை 30.5.70 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து மேலும் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் எம்.அ பயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப்
போக்குவரத்து அதிபரும்.

4-926—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

## கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### உதவி வாத்தியக்காரர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள அரசினர் சங்கீதக் கல்லூரியிலுள்ள உதவி வாத்தியக்காரர் பதவிகளுக்கு, கீழே விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைத் திருப்தி செய்வோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு (பாடசாலை நிருவாகக் கிளைக்கு) 1970 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

**2.** இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 3,450—17 × 90—ரூ. 4,980.

**3. வயதுக்கட்டுப்பாடு :** விண்ணப்பதாரிகள் 1970 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

**4.** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(i) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) (அ) கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான அல்லது உயர்ந்த தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) சிங்களத்தில் கற்பித்தற்கும் பதிவுச் சுவடிகளை அம்மொழியில் பேணுதற்குமான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

(iii) (அ) இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஒரு சங்கீத நிலையத்தால் வட இந்திய சங்கீதத்தில் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது வேறு யாதேனும் பட்டம் பெற்றிருக்க வேண்டும். **அல்லது**

(ஆ) அரசினர் நுால்களைக் கல்லூரியால்/அரசினர் சங்கீதக் கல்லூரியால் வட இந்தி சங்கீதத்தில் ஆறு வருட பயிற்சி நெறியின் பின் வழங்கப்படும் தராதரப் பத்திரம். **அல்லது**

(இ) லங்கா காந்தர்வ சபையால் வழங்கப்படும் சங்கீத இறுதித் தராதரப் பத்திரம்/அரசினர் சங்கீத இறுதிப் பரீட்சைத் தராதரப் பத்திரம்.

(iv) பின்வரும் வாத்தியக் கருவிகளில் யாதேனும் ஒன்றை வாசித்தலில் மிகச் சிறந்த ஆற்றலும் ஏனைய வாத்தியக் கருவிகளில் ஒன்றை அல்லது கூடியவற்றை வாசித்தலில் ஏற்றுக் கொள்ளக் கூடியதான பொது ஆற்றலும் பெற்றிருக்க வேண்டும்.

(அ) வயலின், எஸ்ராஜ், சாரங்கி, டில்றுபா, புல்லாங்குழல்,

(ஆ) தப்ளா, பக்வாஜ், கோல், டொலக், கற்றபெரா, யக்பெரா, உடுக்கு.

குறிப்பு— (i) பல வாத்தியக் கருவிகளை குறிப்பாக மேலுள்ள இரண்டு வகுதிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளவைகளை வாசிக்கும் ஆற்றல் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(ii) இயலுமான அளவு கூடிய தொகை வாத்தியக் கருவிகளை வாசிக்கக்கூடியவர்களை நியமிக்கும் நோக்குடன் தகுதி வாய்ந்த அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**5. நியமன நியதிகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். நியமதாரிகள் விதவைகள், அநாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும்.

(ii) நியமனம் சாதாரணமாக மூன்று வருட காலத்துக்குத் தகுதி காண் முறையில் அமையும். அரசினர் சேவையில் நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து ஒரு வருட காலத்துக்கு பதில் கடமை புரிபவரெனும் அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(iii) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டு வருதற்கு, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கமைய நியமதாரிகள் ஒழுகவேண்டும்.

**6.** அரசாங்க சேவையிலுள்ள தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் உரிய திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், அது விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவர்ால் பெற்றுக் கொள்ளப்பட்டு, போதிய காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**7.** விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் படிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்தின் பொருட்டுச் கொடுபடும் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தகைமைகளும் உயர்தொழில் தகைமைகளும்.

(இ) விண்ணப்பதாரியின் ஒழுக்கம் பற்றிய மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள்.

**குறிப்பு**— ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள அபேட்சகர்கள் நற்சாட்சிப் பத்திரங்கள் அனுப்ப வேண்டியதில்லை.

**8.** விண்ணப்பங்களும் அவை பற்றிய ஏனைய கடிதங்களும் இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் அனுப்பப்படலாகாது.

**9.** இவ்வரசாங்க வர்த்தமானியில் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்படுபவையும் அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

**10.** விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அதுபற்றி உடனே கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இத்தேவைக்கமைய ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பவராவர்.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
**22.4.1970.**

## (மாதிரி விண்ணப்பப் படிவம்)

**கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**அரசினர் சங்கீதக் கல்லூரி உதவி வாத்தியக்காரர் பதவிகளுக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) : ————.
2. அஞ்சல் முகவரி : ————.
3. சாதியம் :
   (அ) வம்சாவழியாகவா அல்லது (ஆ) பதிவு காரணமாகவா இலங்கையர் : ————.
   பதிவு காரணமாக இலங்கையராயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் திகதியையும் தொடர்பிலக்கத்தையும் குறிப்பிடுக : ————.
4. (அ) விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்றுள்ளபடி சரியான வயது : வரு : மா : நா : ———— ————.
   (ஆ) பிறந்த திகதி : வரு : மா : நா : ———— ————.
   (பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்).
5. பின்வருவோர் பிறந்த இடம் :
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் : ————.
6. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சைத் திகதியும் : ————.
   (அ) சிங்களத்தில் : ————.
   (ஆ) தமிழில் : ————.
   (இ) ஆங்கிலத்தில் : ————.
7. கடைசியாகப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ————.
8. பாடசாலையிலிருந்து விலகியபின் புரிந்த உத்தியோகம் பற்றிய விபரங்கள் : ————.
   திணைக்களம் பதவி தொடக்கம் வரை
9. சங்கீதத்தில் பெற்றுள்ள தராதரப் பத்திரம் : ————.
10. எவ்வாத்தியக் கருவிகளை வாசிப்பதில் சிறந்த ஆற்றல் பெற்றிருக்கிறீர் : ————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் நியமனத்துக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

: ————.
திகதி : ————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

4—958—30.4.70.ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

இல. வெ. மு/2/211

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பிரான்சு அரசாங்கத்தால் 1970 ஆம் ஆண்டு வழங்கப்படும் பட்டப்பின் படிப்புப் புலமைப் பரிசில்கள்

பின்வரும் துறைகளிலான பட்டப்பின் படிப்புகளுக்கு பிரான்சு அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

**வகுதி " அ "**

(1) விஞ்ஞானம். (2) எந்திரவியல்.

**வகுதி " ஆ "**

(1) பிரான்சு மொழியும் இலக்கியமும்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்து கொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு 1.** புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு 2.** சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

2. **கால எல்லை.**—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக ஒரு வருடகால அளவினதாகும் ; காலவெல்லை நீடிக்கப்படக்கூடும்.

எவ்வினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு பிரான்சு அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 14.5.1970 அன்று 30 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) (அ) **வகுதி " அ " வின் கீழ் ஒரு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின்**—விரும்பும் கற்கை நெறிக்குப் பொருத்தமுடையதும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்டதுமான இரண்டாம் வகுப்புப் பட்டமேனும் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) **வகுதி " ஆ " வுக்கு விண்ணப்பிப்பவராயின்**—பிரான்சு மொழியை ஒரு பாடமாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(iv) தமது படிப்பை இடைநிறுத்தஞ் செய்யாதவர்களாக இருக்க வேண்டும்.

(v) பிரான்சு மொழியில்* சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(*பிரான்சு மொழியில் சிறந்த அறிவு பெற்றிருக்கும் அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எனினும், இத்தேவையைப் பூர்த்தி செய்யும் அபேட்சகர்கள் ஒருவரும் இல்லாவிடின் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கையிலுள்ள பிரான்சு தேச தூதராலயத்தால் நடாத்தப்படும் பிரான்சு மொழி விரைவுப் பயிற்சி நெறியை பின்பற்ற வேண்டுமென்ற விளக்கத்துடனேயே தெரிவு நடாத்தப்படும். தெரிவு செய்யப்படுபவர்கள் பிரான்சு தேசத்துக்குச் செல்லுமுன் வேண்டிய தேர்ச்சியை அம்மொழியில் பெறவேண்டும்).

**குறிப்பு 1.** அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடப்பாடுகளை 14.5.1970 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.** தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) பிரான்சு தேசத்துக்கு போய்வருதற்கான பயணச் செலவு ;

(ஆ) மாதாந்தம் 750 F சகாயப்படியாக.

(இ) கற்கைச் செலவுகள்.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்கவேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், பிரான்சுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பிரான்சில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்ளற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருடகாலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டபின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்து கொள்ளவேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துதுரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு மே மாதம் 14 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இடைக்கக்கூடியதாக கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார

அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக் கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படு வார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்கவேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர் தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 23 ந வ.

4-987—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## வெளி நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ள வெற்றிடங்கள்

### சுருக்கெழுத்தாளர்கள் பதவிகள்

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ள சுருக்கெழுத் தாளர் பதவிகளுக்கு, தத்தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்ட மாற்றம்பெறற்பாலரான (ஆங்கிலமொழி) சுருக்கெழுத்தாளர் சேவையின் உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. திரு மணமாகா, அல்லது திருமணமாகிச் சிறு குடும்பங்களையுடைய அலுவலர் களிடமிருந்தான விண்ணப்பங்கள் முன்னுரிமை பெறும்.

2. இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பெற்ற படிவத்தின்படி அமைந் தவாறான விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவருக்கு ஊடாக அனுப்பப் படுவதுடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் அவரது தற்போதைய பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்கப்படமுடியும் என விண்ணப்ப தாரர் சேவைபுரியும் திணைக்களத்தின் தலைவரது புறக்குறிப்பொன்றுட னும் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

3. முன்னரேயே ஒன்றுக்கு மேற்பட்ட வெளிநாட்டுத் தூதரகங்களில் சேவையாற்றியுள்ளோர் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

4. இப்பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பெறும் அலுவலர்கள் தாம் கடல்கடந்த சேவைக்கேற்ற உடல்நலத் தகுதியுடையரா என்பதனை அறிதற்பொருட்டு ஒரு வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுமாறு வேண்டப் படுவர். இவர்கள் ஆறு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலவெல்லைக் குக் கடல்கடந்த சேவை செய்யும்வண்ணமும் வேண்டப்படுவர். இக்கால வெல்லையினுள் இவர்கள் மாற்றம்பெற ஆளாகும் நிலையில் இருப்பர்.

5. இப்பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்படும் அலுவலர்கள் தமது தற்போதைய உத்தேச அடிப்படைச் சம்பளங்களைத் தொடர்ந்தும் கிடைக் கப்பெறுவதுடன், மேலதிகமாக, இலங்கையில் இறுக்கப்படற்பாலதான திரட்டப்பட்ட சம்பளத்துக்குப் பதிலாக ஒரு கடல்கடந்த படியை இறுக்கப் பெறுவர். ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கை கடல்கடந்த சேவைப் பிரமாணக் குறிப்புகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறேயாம்.

6. இவ்வமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்ட முன்னைய விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்கள் 1970, மே மாதம் 31 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ என்னை வந்தடைதல் வேண்டும்.

சி. குணசிங்கம்,
நிரந்தரச் செயலாளருக்காக,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
மூதவைக் கட்டடம், கொழும்பு-1.
1970, ஏப்பிறல் மாதம் 12 ஆம் திகதி.

### அட்டவணை

1. விண்ணப்பதாரரின் சொந்தப் பெயர் முதலில் வருமாறு அவரது முழுப் பெயர் (பெரிய, தெளிவான எழுத்துக்களில்) :————.
2. பிறப்புத் திகதி :————.
3. முகவரி :———— அலுவலகம் :————.
   சொந்த முகவரி :————.
4. தேசிய இனம் :————.
5. திருமணமானவரா அல்லவா ? :————.
6. திருமணமானவராயின் குழந்தைகளின் எண்ணிக்கை :————.
7. கல்வித் தகைமைகள் :————.
8. மாற்றம்பெறற்பாலரான சுருக்கெழுத்தாளர் சேவையிற் புகுந்த திகதி :————.
9. தற்போதைய ஆண்டுச் சம்பளம் :————
   (அ) திரட்டப்பட்டது :————.
   (ஆ) உத்தேச அடிப்படைச் சம்பளம் :————
10. விண்ணப்பதாரரின் விரைவு :————.
    (அ) சுருக்கெழுத்தல் :————.
    (ஆ) தட்டெழுத்தில் :————.
11. தற்போதைய கடமைகளின் தன்மை :————.
12. விண்ணப்பதாரரின் தேர்ச்சி :————.
    (அ) சிங்கள மொழியில் :————.
    (ஆ) சிங்களத் தட்டெழுத்தில் :————.
13. எவையேனும் பிற தகைமைகள் :————.

மேலே தரப்பட்ட தகவல் சரியானது என அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திகதி :—. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

4—868—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## இலங்கைப் பல்கலைக் கழகம்

தகுதிவாய்ந்த தாரதரங்களையுடையவர்களிடம் இருந்து மேல்வரும் பதவி களுக்குரிய விண்ணப்பங்களை 19.5.1970 வரை பல்கலைக் கழகம் ஏற்றுக்கொள்ளும்.

(1) மேற்பார்வையாளர் (கட்டிடம்)
(2) மேற்பார்வையாளர் (மின்னியல்)
(3) மின்கம்பி இணைப்பாளர் 2 ம் தரம்
(4) சாரதிகள்
(5) உழவு இயந்திர இயக்குநர்

2. பேராதனை, இலங்கைப் பல்கலைக் கழக நிறுவனக் கிளைத் துணை செயலதிகாரியிடம் இருந்து விண்ணப்பப் பத்திரங்களையும் மேலும் தேவையான விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

3. விபரங்களும் விண்ணப்பப் பத்திரங்களும் கேட்டு எழுதும்போது, தேர்வுநாடி எப்பதவியில் விருப்புடையவர் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன், 9" × 4" அளவினைக் கொண்டதும் முத்திரையொட்டித் தமது முகவரி இடப்பட்டதுமான அஞ்சல் உறை யொன்றும் இணைத்தனுப்புதல் வேண்டும்.

பேராதனை, செயலதிகாரி.
1970 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 8 ந வ.

4-918—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

## பயிற்சிப் பதவியினருக்கான வெற்றிடங்கள்

### இந்திய வர்த்தகக் கடற்பயிற்சிக் கப்பல் "டப்பறின்"

10.4.70 ஆந் திகதிய 14,901 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் தொகுதியில் வெளியாகிய அறிவித்தலைத் தொடர்ந்து இவ்வறிவித்தல் தரப்படுகின்றது. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி 17.5.1970 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. 1969 திசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) ப் பரீட்சைக்குத் தோன்றி, அப்பரீட்சையின் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அப்படியான பரீட்சார்த்திகள், பரீட்சையின் பெறுபேறுகள் பிரசுரமாகிய திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் தங்கள் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரதியை எனக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணத்தின் பொருட்டும், அதாவது பரீட்சைப்பகுதி பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடவில்லையே என்ற காரணத்தின் பொருட்டும் பரீட்சார்த்திகள் எவராவது பரீட்சைப் பெறுபேறுகளின் பிரதியை அனுப்பத் தவறினால், அவர்களின் விண்ணப்பங்கள், போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சமயத்தில் நிராகரிக்கப்படும்.

நிரந்தரச் செயலாளர்,
தேசியமய சேவைகள் அமைச்சு.

தேசியமய சேவைகள் அமைச்சு,
த. பெ. இல. 500
காலிமுகச் செயலகம்
கொழும்பு 1.
1970 ம் ஆண்டு ஏப்பிறில் மீ 17.

4–872—22.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## கொழும்பு மாவட்டம்—கொழும்பு மாநகர சபை பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த கொழும்பு மாநகரசபைப் பகுதிக்கு சடுதி மரணவிசாரணை அதிகாரிக்கான பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பிரதியில் பூர்த்தியாக்கப்படும் விண்ணப்பங்கள் 1970 ம் வருடம் மே மாதம் 30 ந் திகதியிலோ அன்றி அதற்கு முன்னரோ கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபரின் விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

2. தீர்க்கமான சம்பளம் இப்பதவிக்குக் கிடையாது. திடீர் மரணங்களின்போது இடம்பெறும் ஒவ்வொரு மரணவிசாரணைக்கும் ரூபா 7.50 தரப்படும்.

3. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணபத்தாரரும் தான்,

(அ) விண்ணப்ப முடிவு தேதியின்போது 30 வயதுக்கு மேற்பட்டவராகவும் 60 வயதுக்கு உட்பட்டவராகவும் ;

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராகவும் ;

(இ) கொழும்பு மாநகரசபைப் பகுதியில் நிரந்தரப் பிரஜையாகவும் ;

(ஈ) (i) 1925 ம் ஆண்டுக்கும் 1944 ம் ஆண்டுக்கும் இடையே சிங்கள பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்கள பாடத்துடன் கல்வித்திணைக்கள கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் அல்லது,

(ii) சிங்கள பாடத்துடன் சிரேஷ்ட்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்கு சமனான பரீட்சையில் அல்லது அதனிலுங்கூடிய பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும்.

4. விண்ணபதாரிகள் தமது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழ்க் கோரப்படும் பத்திரங்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்பவேண்டும்:—

(அ) பிறப்புசாட்சிப் பத்திரம் ;

(ஆ) ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப்பத்திரம் ;

(இ) விண்ணப்பதாரரின் ஒழுக்கம்,திறமைபற்றிய இரண்டு சமீபகால நற்சான்றிதழ்கள்.

5. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் அல்லது உள்ளூர் ஆட்சிச்சபைகளில் கடமை பார்ப்பவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டி. ஆர். உமகிலிய,
அரசாங்க அதிபர், கொழும்பு மாவட்டம்.

கச்சேரி,
கொழும்பு, 1970 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 20 ந் உ.

**மாதிரி விண்ணப்பப் பத்திரம்**

### கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகரசபைப் பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்

1. முழுப்பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. நிரந்தர இருப்பிடமும், வதியும் கால எல்லையும் : ————.
4. (அ) விண்ணப்ப முடிவு தேதியின்போது சரியான வயது : —.——
 (ஆ) பிறந்த திகதியும் இடமும் : ————.
5. விவாகமானவரா அல்லது பிரமச்சாரியா : ————.
6. கல்வித் தகைமைகள் : ————.
7. தற்போதைய தொழில் : ————.
8. முன்பு வேறு தொழில்கள் புரிந்திருப்பின் அவற்றின் விபரம் : ————.
9. விண்ணப்பதாரிக்கு உரிமையான ஆதனங்களின் பெறுமானமும் பரப்பும் : ————.
10. யாருக்காவது கடன் கொடுமதியாயின் அதன் விபரம் : ————
11. விண்ணப்பதாரி நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டோ, தண்டிக்கப்பட்டோ இருப்பின் அதன் விபரம் : ————.
12. இப்பதவிக்குத் தேவையான வேறு தகைமைகள் இருப்பின் அவற்றைக்குறிப்பிடுக : ————.

என்னால் மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்றும் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

4–897—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## பெருவீதிகள் திணைக்களம்

### ஆராய்ச்சி நிறுவனத்தில் உதவி முகாரிப் பதவி

பெருவீதிகள் திணைக்கள ஆராயச்சி நிறுவனத்திற்கான உதவி முகாரிப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் இங்குதரப்பட்டுள்ளமாதிரிப் படிவத்தில் நிரப்பப்பட்டு "பெருவீதிகள் பணிப்பாளர்" "இளை இ" என முகவரியிடப்பட்டுப் பதிவுத்தபாலில் 22.5.1970 திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும் படி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கவனிக்குக : "ஆ. நி. உதவி முகாரிப் பதவிக்கான விண்ணப்பம்" என்ற சொற்கள் விண்ணபத்தைத் தாங்கிவரும் கடித உறையின் மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

2. **வேதன அளவுத்திட்டம்.**—இப்பதவிக்கான வேதனம் ஆண்டொன்றுக்கு ரூ. 4,152 என ஆரம்பித்து ஆண்டொன்றுக்கு ரூ. 144 கொண்ட 16 ஆண்டு உயர்ச்சிகளாக ரூ. 6,456 வரை செல்லும். வினைத்திறமைகாண்தடை ரூ. 5,304 க்கு முன்னராகும். (திரட்டிய சம்பள அளவு).

3. **ஒப்பந்த நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய நன்மையுடையதுமாகும். நியமனம் பெறுபவர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு உதவு தொகை செலுத்த வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள்.**—நியமனங்கள் யாவும் அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள், நிதி ஒழுங்குவிதிகள் நடைமுறைக்கைந்நூல் ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்துக்குக் காலம் திணைக்களத்தால் வழங்கப்படும் கட்டளைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவானதாக இருக்கும்.

5. **தேவையான தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளை உடையவர் எனபதற்குத் திருப்தியான சான்று காட்டல் வேண்டும்.

(அ) 1970 ஆம் ஆண்டு 5 மாதம் 22 திகதி 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு வயது மேலெல்லைக் கட்டுப்பாட்டினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளது).

(ஆ) (i) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் கணிதத்துடன் (தூய அல்லது பிரயோக) பௌதிகவியல் அல்லது இரசாயனத் துடன் அல்லது

(ii) க.பொ.த.பத்திரப்பரீட்சை (சாதாரணம்) யில் சிங்களம்/தமிழ் கணிதம் (தூய அல்லது பிரயோக) பௌதிகவியல் அல்லது இரசாயனம் என்னும் பாடங்களுடன் இரு தடவைகளுக்கு மேற்படாது தோன்றிச் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(இ) நிலம் மற்றும் கற்பாறை ஆராயும் உட்பாகம் துளையிடும் சாதனங் களிலும் மற்றும் நிலமும் கற்பாறைப்படுக்கைகள் பதம் பண்ணல் நிலவரப்படுத்துதல் என்பன உட்பட 5 ஆண்டுகளுக்குக் குறை யாமல் அனுபவம் பெற்றவராயும் இருக்க வேண்டும்.

**குறிப்பு.**—ஆய்கூட மண்பரிசோதனை நடைமுறையிலும் பிரயோக எந்திரவியலிலும் அறிவுள்ள விண்ணப்பகாரர்களுக்குச் சலுகை காட்டப்படும்.

(ஈ) சிறந்த ஒழுக்க முடையவராயும் உடனலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (நன்கு கவனிக்குக—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய பிர மாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ii) மிகக் கூடிய கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(iii) பெற்ற தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்.

(iv) முன்னைய அனுபவம் தொழிலின் தன்மை என்பனவற்றை உணர்த்தும் சான்றிதழ்.

(v) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு (அரசாங்க சேவையில் உள்ளவர்கள் இந்த உபபிரிவினால் வேண்டப்பட்ட சான்றிதழ்களை இணைக்க வேண்டியதில்லை).

7. அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்களின் விண்ணப் பங்கள் அவரவரின் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பிவைக்கப் படல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும் தாமதத்திற் குரிய போதிய காரணங்கள் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட பகுதித் தலைவர்கள் சிபார்சு செய்தால் அத்தகைய விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைவனவும் இவ்வரசாங்க வர்த்தமானியின் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் செலுத்தும்படி கோரப்படுகின்றது.

9. விண்ணப்பங்கள் அல்லது அவை சார்பான கடிதத்தொடர்புகள் யாவும் 1 ஆம் பந்தியிற் தரப்பட்டுள்ள முகவரிக்கு மட்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கும் அனுப்பு தல் கூடாது.

பெருவீதிகள் திணைக்களம், என். ஜீ. விக்கிரமசிங்க,
கொழும்பு, 18.4.1970. பெருவீதிகள் பணிப்பாளருக்காக.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

**பெருவீதிகள் திணைக்கள**

**ஆராய்ச்சி நிலைய உதவி முகாரிப்பதவிக்கான விண்ணப்பம்**

1. (i) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :————.
   (ii) முழுப் பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.
2. தபால் முகவரி :————.
3. (i) பிறந்த திகதி :————.
   (ii) 1970 ஆண்டு 5 மாதம் 22 திகதியன்று வயது :————.
   ஆண்டுகள் :————. மாதங்கள் :————.
4. (i) சாகியம் :————.
   (ii) இலங்கைக் குடிமகனுயிருத்தல் பாரம்பரியத்தாலா பதிவாலா : ————.
5. பிறப்பிடம் :————.
   (i) விண்ணப்பகாரர் :————.
   (ii) விண்ணப்பகாரரின் தந்தை :————.
   (iii) விண்ணப்பகாரரின் தந்தை வழிப்பாட்டன் :————.
   (iv) விண்ணப்பகாரரின் தந்தை வழிப்பூட்டன் :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. நிலம் மற்றும் கற்பாறை ஆராயும், உட்பாகம் துளையிடும் சாதன களிலும் மற்றும் நிலமும், கற்பாறைப்படுக்கைகளும் பதம் பண்ணல் நிலவரப்படுத்துதல் என்பனவற்றின் மேலான அனுபவம் :————
8. வேறு ஏதாவது தகைமைகள் :————.
9. தற்போது ஏதாவது பதவியிலிருப்பின்
   (i) தற்போதைய பதவி :————.
   (ii) திணைக்களம் :————.
   (iii) வேதன விபரங்கள் :————.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானதென்றோ தவறானதென்றோ காணப்பட்டால் தேர்வுக்கு முன் நான் தகைமை நீக்கம் செய்யப்படு வதற்கும், இத்தவறு தேர்வுக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் பாத்திரனுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
திகதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

4—981—30.4.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## பாற் பொருளாக்கத் தொழிற்சாலை
## பாற்சபை

**உதவிக்கணக்காளர் பதவி—தரம் IV**

பாற்சபையின் சேவையில் கீழே குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டு கீழே கையொப் பமிட்டவருக்கு 1970 ம் ஆண்டு மே 25 ந திகதியன்று அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. **சம்பளம்.**—மாதம் ஒன்றுக்கு ரூபா 600—10×40—ரூ. 1,000 (எல்லாம் உட்பட)

3. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் திருத்திகரமாக அத்தாட்சிப்படுத்த வேண்டியதாவது :—

(அ) 1970 ம் ஆண்டு மே 25 ந திகதியன்று 30 வயதுக்குக் கூடாதவ ராகவிருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த ஒழுக்கமுடையவராகவும் உடல் நிலை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) (i) வர்த்தகம் அல்லது பொருளியலுடன் கணக்கீட்டையும் விசேட பாடமாக எடுத்துப்பட்டம் பெற்றிருப்பதுடன் 3 ஆண்டுகள் கணக்கீட்டு அனுபவம் பெற்றிருத்தலும் வேண்டும். அல்லது

(ii) வர்த்தகத்தில் இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் டிப்ப்ளோமாப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் அத்துடன் 3 ஆண்டுகள் கணக்கீட்டு அனுபவம் பெற்றிருத்தலும் வேண்டும். அல்லது

(iii) கணக்கியலில் இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் டிப்பு ளோமாப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது

(iv) அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றில் அல்லது நன்கு மதிக்கப்பட்ட வணிகத்தாபனமொன்றில் 10 ஆண்டுகள் அனுபவம் பெற் றிருத்தல் வேண்டும் அல்லது

(v) இலங்கையின் தத்துவம்பெற்ற கணக்காளரின் இடைப்பரீட் சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

10 ஆண்டுகள் கணக்கீட்டு அனுபவம் பெற்றுள்ள பாற் சபையின் எழுதுவினைஞர் சேவையின் V ந் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கும் தகுதியுடையோராவர்.

4. **சேவை நிபந்தனைகள்.**—(அ) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவிடத்து இப்பதவியில் நியமனம் பெறுவதற்கு முன் அவர் அரசாங்கத்தில் வகிக்கும் நிலையான பதவியைத் துறத்தல் வேண்டும். அப்படியாக அரசாங்க அங்கீகாரத் துடன் பதவியைத் துறக்குமிடத்துச் சபையின் சேவையிற் சேரும் தருணத்தில் உபகாரச் சம்பளச் சுற்றறிக்கையின் 48அ பிரிவினுள்ளபடி உபகாரச் சம்பள நன்மைகள் யாவற்றையும் தொடர்ந்து வைத்திருப்பர். திணைக்கள, கூட்டுத்தாபன உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் யாவும் 1965 ஒகத்து 20 ந திகதி வெளிவந்த 666 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைக் கிணங்கவே கவனிக்கப்படும். திணைக்கள அல்லது கூட்டுத் தாபனத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட திறைசேரிச் சுற்றறிக்கைக்கு

இணங்க உத்தியோகத்தர்களை விடுவிக்க முடியுமா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) அபேட்சகர்கள் அரசாங்க சேவையில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலன்றி நியமனங்கள் யாவும் நியமித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகட்குத் தேர்வாய்வு முறையில் அமையும்.

(இ) விண்ணப்பகாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கு இணங்கவும் நற்போதிக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கவும் அரசாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவர்.

(ஈ) தேர்வாய்வுக்குரிய கால எல்லை முடிந்தபின் உறுதிப்படுத்துவது, பிறவற்றுடன், அரசகரும மொழித் தேவைகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்கும்.

5. **ஒப்பந்த நியதிகள்.**—இப்பதவி நிரந்தரமானது ; தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் சகாய நிதி நன்மைக்குத் தகவுடையவராவர்.

6. **பிணை.**—தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் பிணைப்பணம் கட்டுமாறு வேண்டப்படுவர்.

7. **மருத்துவச் சோதனை.**—நியமனம் பெறுபவர் கடமையைப்பொறுப் பேற்குமுன் மருத்துவச் சோதனையில் தேறுதல் வேண்டும்.

8. விண்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க் குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு : சமயதிட்சைச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) மிகக்கூடிய கல்விச்சான்றிதழும் உயர்தொழிற்றகைமைச் சான்றிதழ்களும்.

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு ; இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர், கல்லூரிப் போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) முன்னர் வேலை வழங்கியவர்களிடமிருந்து அங்கு செய்த கடமைகளின் தன்மையைக் காட்டும் சான்றிதழ்.

9. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதத்தொடர்புகள் யாவற்றையும் பொது முகாமையாளர், பாற்பொருளாக்கத் தொழிற்சாலை, பாற்சபை என்ற விசலாசத்திற்கேயன்றி வேறெந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

10. விண்ணப்பங்கள் யாவும் இடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

பொது முகாமையாளர்,
பாற்பொருளாக்கத் தொழிற்சாலை,
பாற்சபை.

பாற்பொருளாக்கத் தொழிற்சாலை,
பாற்சபை,
நாரகேன்பிட்டி,
கொழும்பு–5,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19 ம் திகதி.

## பாற் பொருளாக்கத் தொழிற்சாலை

### பாற்சபை

### விண்ணப்பப்படிவம்—உதவிக்கணக்காளர் பதவி—தரம் IV

1. முழுப்பெயர் :————.
2. தனிப்பட்ட முகவரி :————.
3. விண்ணப்பகாரரின் பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
4. விண்ணப்பகாரரின் தந்தையின் பிறந்த இடம் :————.
5. மிகக்கூடிய கல்வித் தகைமைகளும் உயர்தொழிற்றகைமைகளும் :
————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
6. சிங்கள/தமிழ் அறிவு :————.
7. முன் அனுபவ விபரங்கள் :————.
8. இன்றைய உத்தியோக விபரங்கள் :————.
9. விண்ணப்பகாரரின் நற்சான்று சார்பாகச் சான்று பகரக்கூடிய இருவரின் பெயர்கள் :————.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

4–921—30.4.70 ந திக்திய வர்த்தமானி இல. 14,904

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### பரிசோதனைசாலைக்கென உதவி இயந்திர முகாரிக்கான பதவி

நீர்ப்பாசனத் திணைக்களத்திலுள்ள பரிசோதனைசாலைக்கென உதவி இயந்திர முகாரிக்கான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்த்தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " நீர்ப்பாசன அதிபர், த. பெ. என் 1138, கொழும்பு 7 " என்ற முகவரியில் 1970 மே மாதம் 22 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் இடைக்கக்கூடியதாய் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

2. **நியமன நியதிகள்.**—இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளமுடையதுமாகும். விதவையர் அனாதையர் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவுபணம் செலுத்துதல் வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**—ஆண்டுக்கு திரட்டிய வேதனம் ரூபா 5,304—144 × 9 ; 180 × 8—8,040—ரூபா 6,780 க்குமுன் வினைத் திறமைகாண் தடையுமுண்டு.

4. **வேண்டிய தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பத்தாரரும் சமர்ப்பிக்கவேண்டிய திருப்திகரமான சான்று, அவர்

(i) இலங்கையராயிருத்தல் வேண்டும் (பரம்பரையில் அல்லது பதிவில்)

(ii) 1970, ஏப்பிரல், 30 ஆம் திகதியன்று 35 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயது எல்லை கணிக்கப்படமாட்டாது).

(iii) மாசற்ற நற்குணமுடையவராயும் உடல் நலம் வாய்ந்தவராயும் இருத்தல் வேண்டும்.

(iv) கீழ்தரப்பட்டிருக்கும் கல்வித் தகைமைகளும் தேவையான அனுபவமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(அ) (1) கணக்கியல், பௌதிகவியல், பிரயோக கணிதம் உட்பட சி. பா. த. ப. அல்லது இரு தடவைகளுக்குள் ஆறு பாடங்களில் க. பொ. த. ப. (சாதாரணம்). இதில் (சிங்களம்/தமிழ், கணக்கியல், பௌதிகவியல், பிரயோக கணிதம் உட்பட ஐந்து பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்ததாயிருத்தல் வேண்டும்).

(2) பயிற்சியாளராக 5 வருடமும் அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் ஸ்தாபனத்தின் வேலைத்தளத்தில் ஐந்து வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) (1) இலங்கை தொழினுட்பக் கல்லூரியில் இயந்திரம் அல்லது மின்சார எந்திரவியலில் கழகச் சான்றுப்பத்திரம் அல்லது அதற்குச் சமமான சான்றிதழ்.

(2) பயிற்சியாளராக 5 வருடம் பயிற்சி பெற்றபின் அதைத் தொடர்ந்து 3 வருடம் அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் ஸ்தாபனத்தின் வேலைத் தளத்தில் வேலை செய்து அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்; அல்லது

(இ) நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கைதேர்ந்த வேலையாளராக அல்லது வேலைத்தள முகாரியாக 10 வருடம் திருப்திகரமாகப் பணியாற்றிய வேலைத்தள முகாரிகள் அல்லது இயந்திரத்தள முகாரிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். நீரியல் உறுப்புக்கள் அல்லது நுண்ணாய்வு மாதிரியுறுப்புக்களில் போதியளவு அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

5. அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்களின் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

6. விண்ணப்பத்தாரர் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலச் சாதனங்களையல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பெற்றுள்ள கல்வித் தகைமையின் சான்றிதழ்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் ஸ்தாபனத்தில் கடமையாற்றிப் பெற்றுள்ள அனுபவத்தினதும் அதற்குமுன் பயிற்சியாளராக வேலை பயின்ற அனுபவத்தினதும் சான்றிதழ்கள்.

(இ) தற்போது பெற்றுள்ள மூன்று நற்சாட்சிப்பத்திரங்கள் (இவற்றில் ஒன்று கடைசியாகக் கல்வி பயின்ற பாடசாலைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளதாயிருத்தல் வேண்டும்).

(ஈ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)

7. காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சுவின் நிரந்தரச் செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட பிணைப்பணத்தை தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் செலுத்துதல் வேண்டும்.

8. அரசாங்க சேவையின் பதவிகளுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் அரசாங்க வர்த்தமானியின் 1 ஆம் பாகம் 2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

பி. காசிலிங்கம்,
நீர்ப்பாசன அதிபருக்காக.

த. பெ. எண். 1138,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 22 ந் உ.

## மாதிரிப் படிவம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பரிசோதனைசாலைக்கென உதவி இயந்திர முகாரிக்கான பதவிக்கு விண்ணப்பப் படிவம்**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் : ————.
(தனித்தனி எழுத்துக்களில்)
2. அஞ்சல் முகவரி : ————.
3. (அ) விண்ணப்பத்தாரரின் பிறந்த திகதியும் இடமும் : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்று இணைக்கவும்)

(ஆ) (i) விண்ணப்பத்தாரரின் தந்தையார் பிறந்த இடம் : ————.
(ii) விண்ணப்பத்தாரரின் தந்தைவழிப் பாட்டனுர் பிறந்த இடம் : ————.
(iii) விண்ணப்பத்தாரரின் தந்தைவழி முப்பாட்டனுர் பிறந்த இடம் : ————.

(விண்ணப்பத்தாரர் இலங்கையில் பிறந்திருந்தால் (ஆ) (i) அல்லது (ஆ) (ii) ம் (iii) உம் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தாரர் இலங்கையில் பிறவாதிருந்தால் (ஆ) (i) உம் (ii) உம் அல்லது (ஆ) (ii) உம் (iii) உம் நிரப்பப்படுதல் வேண்டும்.

4. தேசீய இனம் : ————.
5. விண்ணப்பத்தாரர் விவாகமானவரா, தனித்தவரா அல்லது தாரமிழந்தவரா : ————.
6. சித்தியெய்த பாடங்களுடன் கல்வித் தகைமைகள் : ————.
(சான்றிதழ்களின் பிரதிகள் ஒவ்வொன்று இணைக்கவும்).
7. கழகச் சான்றுப் பத்திரம், ஏதேனும் இருந்தால் : ————.
8. அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் ஸ்தாபனத்தில் கடமையாற்றிய அனுபவத்தினதும் பயிற்சி பெற்ற அனுபவத்தினதும் விபரங்கள்: ————.
9. தற்பொழுது ஏதேனும் பதவியில் இருந்தால் அதன் விபரங்கள் : ————.
(நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா எனக்குறிப்பிடவும்)
10. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியவர்களின் பெயர்கள் :
(1)
(2)
(3)

இந்த விண்ணப்பத்தில் என்னுல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இதில் காணப்படும் விபரங்களில் ஏதேனும் பொய்யானதென்ருே, தவருனதென்ருே தேர்வுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும் நியமனத்திற்குப்பின் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்ட ஈடு எதுவுமின்றி வேலையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

இடம் : ————.

திகதி : ————.

4-923—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## பெருவீதிகள் திணைக்களம்

### மின்சார முகாரிப் பதவி—தரம் II

இத்திணைக்களத்தில் II ஆம் தர மின்சார முகாரிப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டு " பணிப்பாளர் பெருவீதிகள் " கிளை " இ " கொழும்பு என விலாசமிடப்பட்டு 1970 ஆம் ஆண்டு மே மாதம் 22 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதனம் ஆண்டொன்றுக்கு ரூ. 4,728 என ஆரம்பித்து ஆண்டொன்றுக்கு ரூ. 144 ஆக அதிகரித்து ரூ 6,456 வரை செல்லும் (திரட்டிய சம்பள அளவு)

3. (i) ஒப்பந்த நிபந்தனைகள் : இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய நன்மைகொண்டதுமாகும். அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தப்படவேண்டும்.
(ii) தெரிவு செய்யப்படுபவர் குறுகிய கால அறிவித்தலுடன் வேலை ஒப்புக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4. **வேண்டப்படும் தகைமைகள் :**

(அ) க. பா. சா. பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான ஓர் பரீட்சையில் சித்தி எய்தியவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) கட்டடங்களில் அல்லது பின்வருவனவற்றில் ஏதாவதொன்றில் மின்சார அமைப்பு அல்லது நிறுவும் வேலையில் அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

ஏ. எச். கம்பிகள் அமைத்தலும் அது தொடர்பான மின்சார ஆளித் துணைப்பொறிகள், நிலத்தின் கீழ் அமைக்கப்படும் வடங்கள், மின்சார உயர்த்திகள், நீர் இறைக்கும் பம்புகள், காற்றுச்சீராக்கும் பொறிகள், மின்சாரக் கடத்திகள், எந்திரத்தால் இயங்கும் மின் உற்பத்திக் கருவிகளும் உபநிலைய மின்சார மாற்றிப் பொறிகள் போன்றவற்றில் அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் அல்லது உள்ளூர் ஆட்சிச் சேவையில் அல்லது நன்கு மதிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் மேற்பார்வையாளர் தரத்தில் சேவை செய்தவராயிருக்க வேண்டும்.

(இ) (i) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது கட்டுப்பெத்தைச் செயல்முறைத் தொழில்நுட்ப நிலையத்தில் இரண்டாண்டுகள் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சாரம்) பயிற்சிநெறியை அனுகூலமாக முடித்திருக்க வேண்டும்; அல்லது
(ii) அரசாங்க மின்சாரப் பொறுப்பேற்றத் திணைக்களத்தினுல் நடாத்தப்படும் மின்முகாரிப் பயிற்சி நெறிப் பயிற்சியை அனுகூலமாக முடித்துத் திணைக்களத்தின் III ஆம் தரச் சோதனையில் சித்தியெய்தியவராயிருத்தல் வேண்டும்; அல்லது
(iii) இலண்டன் சிரி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் மின்சார எந்திரவியற் செயல்முறை ஏ. சி. யும் டி. சி. சோதனையில் இடைநிலைத்தரத்தில் சித்தி எய்தியவராயிருக்க வேண்டும்; அல்லது
(iv) இலண்டன் சிரி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் மின்சாரம் அமைத்தல் வேலை சோதனை செய்தல் சோதனையில் பி. அன்ட் சி. பயிற்சி நெறிச்சோதனையில் சித்தி எய்தியவராய் இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பகாரர் 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்குக் கூடாமலும் இருக்க வேண்டும்.

**குறிப்பு.**—அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயது மேலெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத் திணைக்களத்தில் IIம் தர மின்சார முகாரிப்பதவி வகிக்கும் விண்ணப்பகாரர்களுக்கு வயது மேலெல்லை மற்றும் கல்வித் தகைமை விலக்களிக்கப்பட்டுள்ளது.

5. **சேவை நிபந்தனைகள்.**—அரசாங்க சேவை ஆணைக்குழுவிதிகள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூல் ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் அல்லது காலத்துக்குக் காலம் அரசாங்கத்தால் வழங்கப்படும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு அமைவாகவே நியமனங்கள் யாவும் அமையும்.

6. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்:—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**நன்கு கவனிக்குக.**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) உயர்கல்வி மற்றும் தொழிநுட்பத் தகைமைச் சான்றிதழ்கள்.

(இ) சேவை மற்றும் அனுபவம் என்பனவற்றை ஆதரிக்கும் சான்றிதழ்கள்.

7. அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களத் தலைவர்களுக்கூடாகக் குறிப்பிடப்பட்ட திகதிக்குப்பின் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டவிடத்து அவை நிராகரிக்கப்படும். குறிப்பிட்ட திகதிக்கு முன் அவரவர் திணைக்களத் தலைவரால் பெறப்பட்டு அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பகுதித் தலைவர் தகுந்த காரணம்காட்டி சிபார்சு செய்தவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

8. விண்ணப்பங்கள் அல்லது அவை சார்பான கடிதத்தொடர்புகள் யாவும் பெருஞ்சாலைகள் பணிப்பாளருக்கு, கிளை "இ" மட்டுமேயன்றி வேறெந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைத்தல் கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைவனவும் இவ்வரசாங்க வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் செலுத்தும்படி கோரப்படுகின்றது.

என். ஜி. விக்கிரமசிங்க,
பெருவீதிகள் பணிப்பாளருக்காக.

பெருவீதிகள் திணைக்களம்,
கொழும்பு 1,
18.4.70

### மாதிரி விண்ணப்பப்படிவம்

**மின்சார முகாரிப்பதவி, தரம் II ற்கான விண்ணப்பம்**
**பெருவீதிகள் திணைக்களம்**

1. முழுப்பெயர் :————.
(தடித்த எழுத்துக்களில்)
(அ) சொந்தப் பெயர் :————.
(ஆ) பிற பெயர்கள் :————.
2. முகவரி :————.
3. (அ) பிறந்த இடமும் திகதியும் :————.
(பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்).
(ஆ) 1970 ஆம் ஆண்டு மே மாதம் 22 ந் திகதியன்றுள்ள வயது:
————ஆண்டுகள் ————மாதங்கள்.
4. சாதியம் :————.
5. பிறப்பிடம்—
(அ) விண்ணப்பகாரரின் தந்தை:————
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப்பாட்டன்:————
(இ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப்பூட்டன் :
6. தற்போது தொழில் வகிப்பின் தொழிலின் பெயரையும் பெறும் வேதனத்தையும் குறிப்பிடவும் :————.
7. கல்வித் தகைமைகள் :————.
(சித்தி எய்திய பரீட்சையின் பெயரைக் குறிப்பிடவும்).
8. தொழினுட்பத் தகைமைகள் :————.
(சித்தி எய்திய பரீட்சையின் பெயரைத் தருக).
9. மின் அமைப்பு நிர்மாண வேலைகளில் முன் அனுபவம் பற்றிய விபரமும் நியமனமும் அவை சார்பான பிற விபரங்களும்:————

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானதென்றோ தவறானதென்றோ காணப்பட்டால் தேர்வுக்கு முன் நான் தகைமைநீக்கம் செய்யப்படுவற்கும் பாத்திரனுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

4–982—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திறைசேரி இல. 1/84/22 (ஜி).

### மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் உயர்தரத்திற்குச் சிறப்புத் திறமைப் பதவியேற்றம்

மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழ்க் குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர் சிறப்புத்திறமை காரணமாக உயர் தரத்திற்குப் பதவியேற்றம் செய்யப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் |
|---|---|
| பர்ணாந்து, ஜே. ஜே. ஐ. எல். | நீதி அமைச்சு |

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச்
செயலாளர்.

பொதுத்திறைசேரி,
கொழும்பு,
1970, ஏப்பிரல் மாதம் 16 ஆந் தேதி.

4–863—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

### ஆண்டுக்கு 6,600 ரூபா – 180 இல் 8; 240 இல் 5, 9,240 ரூபா சம்பளத்திட்டத்தில் (ஆண்டுக்கு 8,280 ரூபாவுக்கு முன்னர் தகைமைத்தடையுண்டு) பட்டதாரி மொழிபெயர்ப்பாளர்களைப் பதவியேற்றஞ் செய்வதற்காக 1970, சனவரி மாதம் 31 ஆந் தேதியில் நடாத்தப்பட்ட பரீட்சை

மேலே குறிப்பிட்டுள்ள பரீட்சையில் கீழ்க் கூறப்பட்ட பட்டதாரி மொழிபெயர்ப்பாளர் சித்தியடைந்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் |
|---|---|
| கந்தையா, ஆர். (செல்வி) .. | உள்ளூர் ஆட்சி அமைச்சு |

பொதுத்திறைசேரி,
கொழும்பு,
1970, ஏப்பிரல் மாதம் 16 ஆந் தேதி.

பீ. டி, உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச்
செயலாளர்.

4–864—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

### இலங்கைச் சமூக சேவைப் பாடசாலை

**சமூக நலன்புரி சேவையிலும், சமுதாய அபிவிருத்திச் சேவையிலும் குறுகிய தவணைத் தொடர் வகுப்பு**

1970 ஆம் ஆண்டு, யூன்-யூலை மாதங்களில், இலங்கைச் சமூக சேவைப் பாடசாலையினால், சமூக நலன்புரி சேவையிலும், சமுதாய அபிவிருத்திச் சேவையிலும், குறுகிய தவணைத் தொடர் வகுப்பு நடாத்தப்படும்.

1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆம் திகதி வகுப்பு ஆரம்பிக்கப்படும். பாயா தினம் கழிந்த ஒவ்வொரு 2 ம் நாளிலும், 3 ம் நாளிலும் பால 4.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை படிப்புக்கள் நடைபெறும்.

விண்ணப்பதாரர்கள், ஆகக் குறைந்தது, பொ. த. ப. (சா. த.) சோதனையில் 5 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு நேரான ஒரு பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். அதும், சமூக நலன்புரி சேவையில் ஆகக்குறைந்தது 5 வருட அனுபவம் உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள், உரிய சங்கங்களின் சிபார்சுடன், கொழும்பு (3) இல் உள்ள 5 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த 82 ஆம் இலக்கக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கைப் பாடசாலைக் காரியதரிசிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களில், விண்ணப்பதாரரின் பெயர், விலாசம், வயது, கல்வித் தகைமை, அனுபவம் ஆகிய விபரங்கள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ஏ. எம். எம். சகாப்தீன்,
சமூக சேவை அதிகாரி.

இலங்கைச் சமூக சேவைப் பாடசாலை,
82, 5 ம் ஒழுங்கை,
கொழும்பு 3.

4–954—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை மின்சாரச் சபை

### திருகோணமலை உப மின்சார நிலையத்திற்கு அருகாமையில் தொழிலாளர் குடிமனைகள் கட்டுவதற்கு கேள்விப் பத்திரங்கள்

1970 ம் ஆண்டு யூன் மாதம் 5 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை கொழும்பு 2 (த. பெ. இல. 540) இலங்கை மின்சாரச் சபையின் கேள்விச்சபைத் தலைவரால் மேற்கூறிய வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள கொந்திராத்து—சப்ளை இஞ்சினியரின் காரியால யத்தில் பார்வையிடக் கிடைக்கும். கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூபா 100 உம், கிரையம் ரூபா 5 உம் வெவ்வேறாக இலங்கை மின்சாரச் சபை சிறுப்பரிடம் கட்டப்பட்டு, அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட 2 பற்றுச் சீட்டுக்களை கொந்திராத்து—சப்ளை இஞ்சினியர் காரியாலயத் தில் காட்டி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி நிபந்தனைகளின்படி கட்டுப்பணமாகிய ரூபா 100 உம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. பொதுவேலைத் திணைக்களம் அல்லது வேறு அரசாங்க திணைக் களங்களிலோ அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களிலோ ரூபா 300,000 க்கு குறையாத கட்டிட வேலைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டுமே பதிவு அத்தாட்சி காட்டி விண்ணப்பிக்கலாம்.

4. மேற்கூறியபடி பெற்றுக் கொண்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விகள் (இரண்டு பிரதி) அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்பத்தி ரங்கள் 1970 ம் ஆண்டு யூன் மாதம் 1 ம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை வழங்கப்படும்.

5. 1970 ம் ஆண்டு யூன் மாதம் 5 ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மேற்படி கேள்விச் சபைத் தலைவர் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கும் பொழுது கேள்விக் காரர்கள் சமூகமாயிருக்கலாம்.

த. பெ. இல. 540,
கொழும்பு,
1970 ம் ஆண்டு எப்பிரல் மீ 30 ந் உ.

ரீ. டபிள்யூ. மென்டிஸ்,
பொது முகாமையாளர்,
இலங்கை மின்சாரச் சபை.

4-1006—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## மொனறுகலை கச்சேரி

### " எஸ்சல " திருவிழா — 1970 — கதிர்காமம்

" எஸ்சல " திருவிழாவை முன்னிட்டு, கதிர்காமத்தில் செய்துமுடிக்க வேண்டிய கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் மொனறுகலை அரசாங்க அதிபரால் 1970 ம் ஆண்டு மே மாதம் 22 ந் திகதி பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) 38 ஏக்கர் பற்றைக்காடுகளை வெளியாக்குதல் ;

(2) மேற்குப்பகுதியில் தற்காலிக விடுதிகள் அமைத்தல் ;

(3) கிழக்குப் பகுதியில் தற்காலிக விடுதிகள் கட்டுதல் ;

(4) 960 தற்காலிக கக்கூசுகள் கட்டுதல்.

2. கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு மே மாதம் 12 ந் திகதி பிற்பகல் 2.00 மணிவரை ரூபா 20,000 – க்கு மேல் பதிவு செய்யப்பட்ட அரசாங்க கொந்தராத்துக்காரர்களுக்கு விநியோகிக்கப் படும். ஒவ்வொரு கேள்விக்கும் கேள்விக் கட்டணமாக ரூபா 25/- எக்கச்சேரியிலேனும் செலுத்திப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தலின் பின் னரே கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

3. மொனறுகலை அரசாங்க அதிபரிடமிருந்து பெறக்கூடிய வெற்றுப் பத்திரத்தின் இணைப்பிரதியில் கேள்விப்பத்திரங்கள் அனுப்புதல் வேண்டும்.

4. 1970 ம் ஆண்டு மே மாதம் 22 ந் திகதி பிற்பகல் 2.05 மணிக்கு இக்கச்சேரியில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்விக் காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

5. ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரங்கள் அனுப் பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் கவரின் இடதுபக்க மூலையில் வேலையின் பெயர் எழுதப்பட்டு சீல் வைக்கப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது இக்கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடல் வேண்டும்.

6. தகுதியான கேள்விக்காரர் உடனடியாக வேலையைத் தொடங்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

7. மேலும் தேவையான விபரங்களைக் கந்தோர் நேரங்களில் இக் கச்சேரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

8. பெறப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஒன்றினையோ, பகுதியோ அல்லது சகலவற்றையோ நிராகரித்துவிடும் உரிமையை அரசாங்க அதிபர் தனக்கென ஒதுக்கிவைத்துள்ளார் என கவனிக்கவும்.

அரசாங்க அதிபர்,
மொனறுகலை மாவட்டம்.

மொனறுகலை கச்சேரி,
1970 ம் ஆண்டு ஏப்ரில் மீ 19 ந் உ.

4-889—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

குண்டசாலையில் உள்ள மின்சக்தி நிலையத்தில் தாங்கும் சுவரொன்றை நிர்மாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் தலைவர், கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 7 அவர்களால் 1970ம் ஆண்டு வைகாசி மாதம் 23ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அரசாங்க இலாகாக்கள் ஏதாவதொன்றிலாவது கட்டிட வேலைக் கென ரூபா 10,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 100 ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1970ம் ஆண்டு வைகாசி மாதம் 22 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

லூவி குணவர்த்தன,
பணிப்பாளர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல : டிஎ/டி/201
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு சித்திரை மீ 19 ந் உ

4-883—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

பண்டாரவெல, மககஸ்கொட ஆகிய இடங்களிலுள்ள மின்சக்தி நிலையங் களில் இளைப்பாறும் அறைகளை நிர்மாணிப்புதற்கான கேள்விப்பத்திரங் கள் தலைவர், கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 7 அவர்களால் 1970ம் ஆண்டு வைகாசி 23 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அரசாங்க இலாகாக்கள் ஏதாவதொன்றிலாவது கட்டிட வேலைக் கென ரூபா 25,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர் ஒவ்வொன் றிற்கும் தனியாக ரூபா 100 ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1970ம் ஆண்டு வைகாசி மாதம் 22ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

லூவி குணவர்த்தன,
பணிப்பாளர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல : டிஎ/டி/198, டிஎ/டி/200
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு சித்திரை மீ 19 ந் உ.

4-884—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

## சௌக்கிய சேவைத் திணைக்களம்

### ..ன்படா மோட்டார் வாகனங்களின் விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள்

..க்கானும் மோட்டார் வாகனங்களின் விற்பனைக்கான, சீல்வைத்த ..ள்விப்பத்திரங்கள் சௌக்கிய சேவை அதிபதியால் 1970, மே மாதம் .. ஆந் திகதி மு.ப. 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| ..திவி.லக்கம் | இனம் | | கேட்கப்பட வேண்டிய குறைந்த விலை ரூபா |
|---|---|---|---|
| ..என் 2328.. | 4 சில்லு ஜீப் திறந்த பச்சை வில்லீஸ் | .. | 4,500 |
| ..என் 1156.. | ஒஸ்ரின் நோயாளர் வண்டி | .. | 3,000 |

கொழும்பு 5, நரஹன்பிட்டி, மலேரியாத் தடை இயக்க அத்தியட்சருடன் ..ன்னேற்பாடு செய்து, வேலை நேரங்களில் வாகனங்களைப் பரிசோதிக்..லாம்.

2. கொழும்புக் கச்சேரி தவிர்ந்த ஒரு கச்சேரியில் அல்லது கொழும்பு, ..பார்க் வீதி, இலங்கை வங்கியில் சௌக்கிய சேவை அதிபதியின் வரவில் ..ள்வி வைப்புப் பணமாக ரூபா 100 செலுத்தி அதற்கான பற்றுச் ..ட்டைச் சமர்ப்பிப்பதன்பேரில் 14.5.1970 ஆந் திகதியன்று பி. ப. 4 ..ணி வரை சிலிங்கோ மாளிகையிலுள்ள சௌக்கிய சேவை அதிபதியின் ..ணக்குப் பிரிவிலிருந்து பெறக்கூடிய படிவங்களின் இரட்டைப் பிரதி ..ில் கேள்வி விலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ..ாகனத்துக்கும் கேள்வி விலைகள் தனித்தனியாகக் கொடுக்கப்பட ..வண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை வைத்தனுப்பும் காகித உறைகள் யாவற்றின ..ம் இடது மேல் மூலையில் "பயன்படா மோட்டார் வாகனக் கொள் ..னவுக்கான கேள்வி விலை" என்று எழுத வேண்டியதுடன், அவற்றில் ..சௌக்கிய சேவை அதிபதி (கணக்குகள்), தபாற் பெட்டி 584, சிலிங்கோ ..ாளிகை, கொழும்பு என்று விலாசமிடப்பட வேண்டும். காகித உறையின் ..டது கீழ் மூலையில் கேள்வி விலைக்காரரின் பெயரும் விலாசமும் ..கொடுக்கப்பட வேண்டும். கேள்வி விலைகள் பதிவுசெய்யப்பட்ட உறையினுள் ..வைத்து தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது கொழும்பு, சிலிங்கோ ..ாளிகை, ஐந்தாவது தளத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்வி ..விலைப் பெட்டிக்குள் போடலாம்.

4. மேலே பந்தி 1 இல் குறிப்பிட்டுள்ள நேரத்தையும், திகதியையும் ..தொடர்ந்து உடனடியாக கேள்வி விலைகள் திறக்கப்படும். கேள்வி ..விலைக்காரர்கள் கேள்வி விலைகள் திறக்கப்படும் நேரத்தில் சமூகமாயிருக் ..லாம். அப்போது கேள்வி விலைக்காரரின் பெயர்களும், அவர்களால் ..றிக்கப்பட்ட விலைகளும் வாசிக்கப்படும்.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி விலைக்காரர், அவரின் கேள்வி ..விலை ஏற்றுக் கொள்ளப்பட்டமை அவருக்குத் தெரிவிக்கப்பட்ட திகதியி ..லிருந்து 3 நாட்களுள் முழு விலையையும் செலுத்தி வாகனத்தை எடுத்துச் செல்லத் தவறினால், கேள்வி வைப்புப்பணம் எதுவித உரிமைக் கோரிக்கையுமின்றிப் பறிமுதலாக்கப்படும்.

6. கேள்வி விலைக்காரர் எவரேனும் அவரது கேள்வி விலை ஏற்றுக் கொள்ளப்பட்டதென்ற அறிவித்தலை எழுத்தில் பெற்ற ஏழு நாட்களுள் அவர் கேட்ட விலையை முற்றாகச் செலுத்த மறுத்தால் அல்லது தவறினால் அவரது வைப்புப் பணம் பறிமுதலாக்கப்பட்டு இரண்டாவது கூடிய கேள்வி விலைக்காரருக்கு வாகனம் கொடுக்கப்படுவதுடன், அவரது பெயர் முடிக்குரிய தவறிய கேள்வி விலைக்காரர்கள் பட்டியலில் சேர்க்கப்படும்.

7. கேள்விப் படிவங்கள் 14.5.1970 ஆந் திகதி பி.ப. 4.00 மணி வரை வழங்கப்படும்.

8. கொழும்பு, சிலிங்கோ மாளிகை, சௌக்கிய சேவை அதிபதி (கணக்குகள்) அறையில் 1970 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி விலைகள் திறக்கப்படும். கேள்வி விலைகள் திறக்கப்படும் நேரத்தில் சமூகமாயிருத்தற்கு கேள்வி விலைக் காரர்களோ, அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளோ விரும்பினால் அனுமதிக்கப்படுவர்.

9. கேள்வி விலைக்காரர்கள் அவர்களது விலைகளைக் கேள்விப் பத்தி ரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து நான்கு வார காலத்திற்குச் செல்லுபடியானவையாக வைத்திருத்தல் வேண்டும்.

10. கேட்கும் தொகை படிவத்தில் இலக்கத்தில் எழுதப்பட்டு, வாக்கியத்திலும் திரும்பக் குறிப்பிடப்பட வேண்டும். வாக்கியங்களிலும், இலக்கங்களிலும் அல்லது அவை இரண்டுக்குமிடையில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின் கேள்வி விலை நிராகரிக்கப்படும். கேள்வி விலையில் செய்யப்படும் சகல மாற்றங்களும், அழித்தல்களும் கேள்வி விலைக்காரரால் முதலெழுத்தொப்பமிடப்பட வேண்டும்.

11. மேலே பந்தி 5 இல் உள்ள நிபந்தனைகளுக்கமைவாக கேள்வி விலை வைப்புப் பணங்கள் திருப்பிக் கொடுக்கப்படும்.

12. மேலும் ஏதாவது தகவல்கள் வேண்டுமெனில், அதனை கொழும்பு செக்கிரட்டேரியட் கட்டடம், சௌக்கிய சேவைத் திணைக்களம், போக்கு வரத்து உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

13. கேள்வி விலைகளில் எதனையும் அல்லது முழுவதையும் ஒப்புக் கொள்வதற்கு அல்லது நிராகரித்தற்கான உரிமையை சௌக்கிய சேவை அதிபதி தம்வசம் வைத்துக்கொள்கிறார்.

கே. துரைராசா,
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

சௌக்கிய சேவை அதிபதி அலுவலகம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 23 ந வ.

4—937—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### தூக்கிச் செல்லக்கூடிய மின் உண்டுபண்ணும் கருவிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

..ாணி அபிவிருத்தி அதிபர் 1970.5.29 ந் திகதி மு. ப. 11.00 மணி வரை ..பின்வருவனவற்றிற்குரிய கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார் :—

தூக்கிச் செல்லக்கூடிய மின் உண்டுபண்ணும் கருவிகள் 2.

வோல்ற்ஸ் 220 சைக்கிள்ஸ் 50.

(i) 800 வாட்ஸ் உண்டாக்கக் கூடியது.

(ii) 1,500 வாட்ஸ் உண்டாக்கக் கூடியது.

கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். முன்னைய ..கையிருப்பு அல்லது கப்பலில் வர இருப்பவையும் அத்துடன் இருப்பனை ..த்திய வேலைத்தலத்தில் விநியோகிக்கப்பட்டவையும் எவ்வளவு விரை ..வில் விநியோகிக்க முடியுமென்ற காலத்தையும் கேள்விக்காரர் குறிப் ..டலாம்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ் ..லுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் ..ணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலு ..லகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ..ரு கச்சேரியிலோ செலுத்தி, 1970 ம் ஆண்டு மே மாதம் 25 ந் திகதி ..ண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி ..பிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக் ..கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க ..ாம்.

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "தூக்கிச் செல்லக் கூடிய மின் உண்டுபண்ணும் கருவிகள் இரண்டு வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்று முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்க கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டி ருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபி விருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக் களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப் பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாதவையு மாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள் விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

6. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்ற மிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்டவேண்டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1970.5.29 ம் திகதி முற்பகல் 11 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

9. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

10. மேலதிகத் தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தி. சு. சுப்பிரமணியம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
23.4.1970.

சீரீ/2/412.

4–959—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## சௌக்கியத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ந் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ந் திகதி 1970 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தைக் கொழும்பு தவிர்ந்த ஏனைய எந்த ஒரு கச்சேரியிலோ அல்லது கொழும்பு, பிறிஸ்டல் வீதியில் இருக்கும் இலங்கை வங்கியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிககப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அலலது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெறறுககொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிருபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ஆம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்விகளை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாயவிரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செயதபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு "பீ" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை "சீ" யில் உள்ள மேலதிகமான உணவுப்பொருட்களுக்கும் வீதங்கள் குறிப்பிடவேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ் நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டியபின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து, அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

13. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு நிலைய பொறுப்பு அலுவலாளர், நோயாளிகளுக்கும் ஊழியருக்கும் வேண்டிய அரிசியை (நோயாளியாலும் ஊழியராலும் அரிசிக்கூப்பன் கொடுத்தவர்களுக்கு) பெறுவதற்கு அனுமதிப்பத்திரம் உணவுப்பகுதியிடமிருந்து பெற்றுக் கொடுப்பர். இவ்விதம் கொடுக்கப்படும் அரிசி இனமாகவோ அல்லது குறைக்கப்பட்ட விலையிலோ 19.12.66 க்குப் பின் உணவுப்பகுதியால் நிர்மாணிக்கப் பட்டதாய் இருக்கும்.

புத்தளம்,
17.4.1970.

ஆர். எச். பீறிஸ்,
சௌக்கிய சேவை அத்தியட்சகர்.

### குறித்த அட்டவணை

| தாபனம் | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைபுப்ப் பணம் ரூபா | கேள்வி மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள் கடந்த 6 மாதத்திற்கு — வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீன் | மாட்டி றைச்சி | கரு வாடு | காய் கறி | மீன் | மாட்டி றைச்சி | கரு வாடு | காய் கறி | பால் உணவு |
| உடப்பு கிராம வைத்தியசாலை | 100 .. | 600 .. | 15.5.70 காலை 10.00 மணி | 300 .. | — .. | 200 .. | 600 .. | 400 .. | — .. | 200 .. | 800 | — |

4–888—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

## கடற்றொழில் திணைக்களம்

**பயிற்சி வள்ளம் "புகுனுமாறு 1" இன் விற்பனைக்கான கேள்விகள்**

"புகுனுமாறு 1" எனப்படும் ஒரு வள்ளத்தை விற்பதற்கான கேள்விப் பத்திரங்கள், கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரஙகளும், ஏனைய விபரங்களும் 1970.5.14 ந் தேதி நண்பகல் 12.00 மணிவரை கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விகள் 1970.5.15 ந் தேதி காலை 10.30 க்கு முடிவுறும்.

4. கேள்வி வைப்புப் பணம் ரூபா 200.

ஐ. ஜே. ஜீ. பர்ணந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1970 ம் ஆண்டு எப்பிரல் மீ 22 ந் உ.

4–952—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## ஏல விற்பனை

கொழும்பு 3 இல் உள்ள பாலதக்ஷ மாவத்தையைச் சேர்ந்த (லோவர் லேக் வீதி)—(பாராளுமன்ற கட்டிடத்திலிருந்து 150 யார் தூரத்திலுள்ளது) சமூக சேவைப் பகுதி வளவிலுள்ள " செத்சல" விற்பனைச் சாலையில் 1970 ஆம் ஆண்டு, மே மாதம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் பின்வரும் புடவை வகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பின்வரும் புடவை வகைகள் சிறந்த ரகத்தைச் சேர்ந்தன. வேலை நேரங்களில் இவைகளின் சாம்பிள்களை மேற்குறிக்கப்பட்ட விலாசத்தில் பார்வையிடலாம் :—

1. ஹனிகூம் துவாய்கள் —வெள்ளை—24" × 45" .. 14,349
2. துடைதுண்டுகள்—வெள்ளை— 1½" அகலம் நிறக்கரை 18" × 18" .. 62,122
3. கபில நிறத் துடைதுண்டுகள்—கோடிடப்பட்டன—24" × 24" 154,584
4. குசினித்துடைதுண்டுகள்—கபில நிறக் கோடிடப்பட்டன—24" × 24" .. 16,887
5. பீங்கான் கட்டும் துண்டுகள்—கபிலநிறம்—1" கோடிட்ட கரை—24" × 32" .. 6,764
6. பின்னிய கைக்குட்டைகள்—15" × 15" .. 18,230

ஏலத்தில் கொள்வனவு செய்பவர், ரொக்கம் கட்டி உடனடியாக சாமான்களை ஏற்றிச் செல்லுதல் வேண்டும்.

ஏ. எம். எம். சகாப்தீன்,
சமூக சேவை அதிகாரி.

சமூக சேவைப் பகுதி,
கொழும்பு 3.

4–957—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | 3.4.70 | வெள்ளி | 25.3.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி | 3.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி | 8.4.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி | 17.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் | 23.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| மே | 8.5.70 | வெள்ளி | 30.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி | 8.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி | 15.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி | 22.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| யூன் | 5.6.70 | வெள்ளி | 29.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் | 5.6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் | 11.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் | 18.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
**அரசாங்க அழுத்தகன்.**

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
**1970 ஆம் ௵ மாச்ச ௴ 5 ஆந் ௳.**

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.